கனம் திரு. எம். பக்தவத்சலம் : அநேகமாக எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிற அபிப்பிராயம் ஒரு கோடி ஜனத் தொகைக்கு ஒரு பல்கலைக்கழகம் இருக்கலாம் என்பது. இன்றைக்கு நம் மாநிலத்தில் இரண்டுக்கு மேல் இன்னொரு பல்கலைக்கழகம் ஏற்பட்டால், அதனால் ஒன்றும் போட்டா போட்டிக்கு இடமில்லை.

Vellakondansamudram tank (repairs)

* 72 *Q.*—SRI S. NANJUNDA ROW : **Will the Hon. the Minister for Agriculture be pleased to state—**

(*a*) whether the Government have received a scheme for the repair of Vellakondansamudram tank in Vedasandur sub-taluk; and

(*b*) if so, when the scheme will be executed?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) The Chief Engineer (Irrigation) has sent proposals, for the desilting of Vellakondasamudram Tank in Dindigul taluk of Madurai district, at an estimated cost of Rs. 1·94 lakhs. The proposals sent through the Board of Revenue (F.P.) have not yet been received with the remark of the Board. The question of according administrative approval to the proposals will be considered on receipt of the proposals from the Board.

திரு. எஸ். நஞ்சுண்டராவ் : வேடசாந்தூர் பகுதி ரொம்ப பிற்போக்கான பகுதி. அந்தத் தொகுதியில் வருஷா வருஷம் 20 அங்குலத்திற்கு மேலே மழை பெய்யாது. ஆகையினாலே அந்தக் குளத்தை சீர்திருத்துவதற்கு எஸ்டிமேட் வந்ததும், உடனடியாக வேலையை முடித்துக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். அந்த ஏரிக்கு வெள்ளக்கொண்டான் சமுத்திரம் என்று அழகாக பெயரிடப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த சமுத்திரம் 10 வருஷமாக தண்ணீர் இல்லாத குளமாக இருப்பதினால், அதை உடனடியாக மராமத்து செய்துகொடுத்தால், 500 ஏகருக்கு தண்ணீர் பாயும். அதை நல்ல முறையில் ரிபேர் செய்துகொடுக்க வேண்டும் . . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை ஒரு உப கேள்வி மூலமாகக் கேட்க வேண்டுமே தவிர, சிறு பிரசங்கம் செய்யக்கூடாது.

கனம் திரு. பி. கக்கன் : வெள்ளைக்கொண்டான் சமுத்திரத்தில், மழை பெய்தால் நிறைய சமுத்திரம் மாதிரி தண்ணீர் தேக்க வேண்டும் என்று நினைத்துத்தான் அரசாங்கம் பரிசீலனை செய்து, ஏற்கனவே கொஞ்சம் அதற்காக பணம் செலவு செய்திருக்கிறது. வாய்க்கால் வெட்டுவதற்காக, 'சாணல் ரிபேர்' செய்வதற்காக ரூ. 8,000 செலவு செய்யப்பட்டிருக்கிறது. அணைக்கட்டை பழுது பார்ப்பதற்காக ரூ. 32,450-க்கு ஒரு எஸ்டிமேட் தயார் செய்து,

2nd July 1962]

அதையும் செய்வதற்காக ஏற்பாடு செய்து திட்டமிட்டிருக்கிறார்கள். இது ஒரு முக்கியமான திட்டம். இதை எடுத்துக் கொள்ளுவதற்கு அரசாங்கம் முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Scale of pay of N.G.Os. (further revision)

* 73 Q.—**Sri A. ARUMUGAM : Will the Hon. the Minister** for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any representations from the Tamil-Nad Non-Gazetted Officers' Association regarding certain disparities in the recent revision of pay scales; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A Memorandum was received from the Tamil-Nad Non-Gazetted Government Officers' Association by the Government requesting for further revision of scales of pay of certain categories of staff and improvement of other service conditions. After a detailed examination of the various requests of the Association a reply was given to its Secretary in Government Letter No. 96520/Fin, Spl/60-1, complete.

Sri C. CHIRANJEEVULU NAIDU : When does the Government propose to integrate the services of personnel transferred from Andhra Pradesh to Madras State and also give them pay-scales as obtaining in Madras State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : It is under examination. I cannot say exactly when the integration will be comlpete.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளபடி கொடுக்கப்படும் பஞ்சப்படி உயர்வு, இந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்குப் போதுமானதாக இருக்குமா? இதனால் சர்க்கார் ஊழியர்கள் திருப்தி அடைவார்கள் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னைப் பொறுத்த வரையில், சர்க்கார் ஊழியர்களைப் பொறுத்தவரையில், முழுத் திருப்தி ஏற்படும். மற்றவர்கள் தலையிடாமல் இருந்தால் ஒரு தொந்தரவும் கிடையாது.

Cattle Insurance Scheme

* 75 Q.—Sri V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to introduce cattle insurance scheme in the State?

The Hon. Sri P. KAKKAN : Yes, Sir.